# பிரகாசிக்கப்படுதல்

## பிரகாசிக்கப்படுதலின் அவசியம்

1. இயேசு கிறிஸ்துவை அறியாத ஜென்ம சுபாவமுள்ள மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு பரிசுத்த ஆவியானவர் வேதவசனத்தின் மூலம் அவனை பிரகாசிக்கிறார்.

   ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை 'ஏற்றுக்கொள்ளான்'; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை 'அறியவுமாட்டான்' (1 கொரி 2:14).

   அப்போஸ்தலனாகிய பவுல் பெஸ்துக்கு முன்பாக பேசும்போது அகரிப்பா ராஜாவும் அங்கே இருக்கிறார். பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக்கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான் (அப் 26:24). காரணம்! பெஸ்துவின் இருதயம் குருடாக்கப்பட்டிருக்கிறபடியினால் பவுல் சொன்ன வார்த்தைகளை பெஸ்துவால் புரிந்துகொள்ள முடியவில்லை.

   அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த 'உங்களை' உயிர்ப்பித்தார் (எபே 2:1). மனிதன் பாவம் செய்வதற்கு முன்பாக தேவனோடுகூட ஐக்கியம் இருந்தது. தேவன் பேசினால் புரிந்துகொண்டான். ஆனால் அவன் பாவம் செய்தபொழுது தேவனை சார்ந்து இருப்பதை விட்டுவிட்டு இந்த உலகத்தை சார்ந்திருந்தான். இப்படிப்பட்ட இந்த நிலையில் தேவன் பேசுவதை அவன் அறிந்துகொள்ள முடியாத நிலையில் காணப்படுகிறான். பவுல் கூறுகிறார்: தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் (2 கொரி 4:4). இப்படிப்பட்ட நிலையில் காணப்படுகிற ஒரு மனிதனைத்தான் பரிசுத்த ஆவியானவர் பிரகாசிக்கச்செய்கிறார். இவர்கள் நற்செய்தியை கேட்கும்போது பரிசுத்தாவியானவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். பரிசுத்த ஆவியானவர் அவர்களை உணர்வடையச்செய்கிறார். உதாரணமாக: பவுல் பேலிக்ஸிடம் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்தான் என்று வாசிக்கிறோம் (அப் 24:25). இங்கே பரிசுத்த ஆவியானவர் அவனுக்கு அந்த உணர்வை கொடுக்கிறார்; ஆனால் அவன் மனம்திரும்பவில்லை. இந்த பிரகாசிப்பிக்கிற ஊழியத்தின் நிமித்தமாகதான் ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாகிறான்.

2. இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி வேதத்தை புரிந்துகொள்ளுவதற்கு பிரகாசிக்கப்படுதல் அவசியம்.

   சீஷர்களுக்கு வேதவாக்கியங்களை புரிந்து கொள்ளும்படியாக கிறிஸ்துவானவர் அவர்களுடைய இருதயத்தை திறந்தார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி... (லூக்கா 24:45).

   சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (யோவான் 16:13). இயேசுகிறிஸ்து

பரமேறிபோன பின்பு அவர் அனுப்பின பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கு நமக்குள் வாசம்செய்து, வேத வசனங்களை புரிந்து கொள்ள உதவி செய்கிறார். இதை பவுல் தன்னுடைய நிருபங்களில் சொல்லியிருப்பதை காணமுடியும் (1 கொரி 2:6–13). மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம் (வச.7). தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகள் (வச.9). தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் (வச.10). ஆக, பரிசுத்த ஆவியானவருடைய பிரகாசிப்பித்தல் இல்லாமல் ஒரு எந்த விசுவாசியும் வேத வசனத்தை புரிந்துகொள்ளமுடியாது. தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் (வச.11). தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் (வச.12).

<u>பிரகாசிக்கப்படுதலின் வரையறை</u>

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை மனிதன் புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் அவனுடைய மனதை பிரகாசிக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் வேதத்திற்கு புறம்பான ஒரு விஷயத்தை இன்றைக்கு அவனுக்கு வெளிப்படுத்துவதில்லை; மாறாக எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையிலிருந்து வெளிப்படுத்துகிறார்.

<u>பிரகாசிக்கப்படுதலின் வேதபகுதிகள்</u>

1. இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன் (யோவான் 16:12–15).
2. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம். ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக

அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது (1 கொரி 2:9–16)

3. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் (எபே 3:16–19).
4. நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக (1 யோவான் 2:20,27).

<u>பிரகாசிக்கப்படுதலின் அளவு</u>

சபையுகத்தில் வாழக்கூடிய ஒவ்வொரு விசுவாசிகளுடைய இருதயத்திலும் அவர் வாசம்செய்கிறார். பிரகாசிக்கபடுதலின் ஊழியமானது ஒவ்வொரு விசுவாசிகளுக்குள்ளும் இருக்கிறது. ஆனால் அவிசுவாசிகளை குறித்து பார்க்கும்பொழுது ஒரே ஒரு காரியத்தை மட்டுமே பரிசுத்த ஆவியானவர் செய்கிறார்; இந்த வேதவசனத்தின் மூலமாக சுவிசேஷத்தை அவர்கள் கேட்கும்போது அவர்களுடைய இருதயத்திலே பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். பிரகாசிக்கப்படுதலின் அளவு என்பது விசுவாசிக்கும் உண்டு; அவிசுவாசிக்கும் உண்டு. அவிசுவாசிகளை உணர்த்துகிறார்; விசுவாசிகளை பிரகாசிப்பித்து, சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார்.

பரிசுத்த வேதாகமம் முழுவதும் இந்த பிரகாசிக்கப்படுதலின் அளவில் அடங்கும். ஆதியாகமம் முதல் வசனம் தொடங்கி வெளிப்படுத்தல் கடைசி வசனம் வரைக்கும் தேவன் நம்மை வசனத்தின் மூலம் பிரகாசிக்கிறவராக இருக்கிறார்.

<u>பிரகாசிக்கப்படுதலுக்கான தடைகள்</u>

1. **நம்முடைய பாவங்கள் (அ) மாம்சீகமான செயல்கள்**: <u>பவுல் கூறுகிறார்:</u> சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று (1 கொரி 3:1). பெலனில்லாதவர்களானதால்... (1 கொரி 3:2) பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரி 3:3). இப்படி இவர்கள் மாம்சத்தில் காணப்பட்டு ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லாததினால் பவுல் ஆவிக்குரிய ஆழமான காரியங்களை இவர்களுக்கு அறிவிக்க முடியவில்லை. <u>பேதுரு தன்னுடைய நிருபத்தில் குறிப்பிடும்போது:</u> சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய

களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு 2:2,3) என்று கூறுகிறார்.

2. **முன்கூட்டியே நம்முடைய மனதில் நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் (அ) பாரம்பரியம்:** ஒவ்வொரு முறையும் நாம் வேதாகமத்தை வாசிக்கும்பொழுது புதிதாய் அணுகுவதுபோல வாசிக்கவேண்டும். நாம் வாசிக்கப்போகும் வேதபகுதியை குறித்து ஏற்கனவே நம்மிடத்தில் ஏதாவது கருத்துக்கள் இருக்குமானால் அதை எடுத்துப்போட்டு, புதிதாய் படிப்பதுபோல நாம் ஜெபத்தோடு அமர்ந்திருந்து படிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து மதத்தலைவர்களை பார்த்து: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்குகிறீர்கள் என்று எச்சரிக்கிறதை காண்கிறோம் (மாற்கு 7:9).
3. **வேத வசனத்தின் அறிவு குறைவு (அ) அறியாமை:** இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்? (மாற்கு 12:24). பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியானவர் வேதவசனத்தை கொண்டு நம்மை பிரகாசிக்கசெய்யும்போது வேதவசனத்தை வேதவசனத்தோடு ஒப்பிட்டு காண்பிப்பார் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆவியானவருடைய நடத்துதல் உணர்வுப்பூர்வமாக இல்லாமல் வசனத்தின் அடிப்படையில் இருக்கும். <u>உதாரணமாக:</u> கந்தாகே மந்திரிக்கு வேத வசனத்தை விளக்கிச்சொல்வதற்கு 'வேத வசனத்தை நன்றாக அறிந்த பிலிப்புவை' பரிசுத்த ஆவியானவர் அங்கே அனுப்புகிறார். சிலர் வேத வசனத்தின் அறியாமையினால் ஒரு வசனத்தை எடுத்துக் கொண்டு அதை தவறாகப் புரிந்து கொள்கிறார்கள் அது ஆவியானவருடைய பிரகாசிப்பித்தல் அல்ல.
4. **வேத வியாக்கியானத்தின் தவறான முறைகள்:** நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2 தீமோ 2:15). வேத வசனத்தை சரியான முறையில் படித்து நாம் வியாக்கியானம்பண்ணும்போது அதை நாம் சரியான முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

<u>பிரகாசிக்கப்படுதலின் நோக்கம்</u>

அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் (யோவான் 16:14). பரிசுத்த ஆவியானவரின் பிரகாசிக்கப்படுதலுக்கான ஒரே நோக்கம் தன்னை மகிமைப்படுத்துவதற்கல்ல, கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதே ஆகும்.

<u>பிரகாசிக்கப்படுதலின் மூல ஆதாரம் மற்றும் முகவர்கள்:</u>

பிரகாசிக்கப்படுதலின் மூல ஆதாரம் பரிசுத்த ஆவியானவர் என்பது சந்தேகமில்லை. ஆனால், சிலர் எந்த ஒரு போதகரும் விளக்கிச்சொல்ல அவசியமில்லை நீயே அமர்ந்திருந்து வேதத்தை கற்றுக்கொள் பரிசுத்த ஆவியானவர் உனக்கு உதவி செய்வார் என்று சொல்லி தவறான எண்ணத்தை கொண்டு வருகிறார்கள். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை (1 யோவான் 2:27) என்கின்ற வசனத்தை தவறாக புரிந்துகொண்டு அநேகர் சொல்லுவதுண்டு. முதல் நூற்றாண்டில் அனேக கள்ள போதகர்கள் சபைக்குள் நுழைந்து எங்களுக்கும் தேவன் வெளிப்பாட்டை கொடுத்தார் என்று சொல்லி அவர்களை குழப்பமடையச்செய்தார்கள். அப்போது அப்போஸ்தலனாகிய யோவான் உங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரே அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் என்கின்ற

பின்னணியிலே தான் இதை குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியானவர் சிறந்த ஆசிரியர் என்பது உண்மைதான் ஆனாலும், சபைக்கு வேத வசனத்தை விளக்கிச் சொல்வதற்கு போதக வரமுடைய நபர்களை அவர் கொடுத்திருக்கிறார். போதிக்கிறவன் போதிக்கிறதிலும் (ரோமர் 12:7), என்று வாசிக்கிறோம். ஆக, சில வேதாகம ஆசிரியர்களை கூட பரிசுத்த ஆவியானவர் முகவர்களாக பயன்படுத்துவதைப் புரியவைக்கிறார்.

## பிரகாசிக்கப்படுதலின் நடைமுறை வாழ்க்கை

பரிசுத்த ஆவியானவர் வேதவசனத்தை நமக்கு புரிந்துகொள்ள உதவி செய்யும்போது அதை நாம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தமுடியும் மட்டுமல்ல, அதை மற்றவர்களுக்கு விளக்கிச்சொல்லவும் முடியும். எபிரெய எழுத்தாளர் 5:14இல் 'பயிற்சி' என்கின்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான் (எபி 5:12,13). இவர்கள் இன்னும் பாலுண்கிற குழந்தையைப்போல இருக்கிறார்களே தவிர ஒரு ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லை என்று எழுத்தாளர் வெளிப்படுத்துகிறார். இதற்கு காரணம்! அவர்கள் வேதவசனத்தை கேட்கவில்லை என்பதனால் அல்ல... அவர்களுக்கு பயிற்சி இல்லாததினால் அதாவது கேட்ட வசனத்திற்கு அவர்கள் கீழ்படியவில்லை. நாம் வேத வசனத்திற்கு கீழ்ப்படியும்போது கர்த்தர் மகிமைபடுகிறார். நாமும் தேவ சித்தத்தின் மையத்தில் காணப்படுவோம். அதுமட்டுமல்ல அதற்கு சரியான பொருள் விளக்கத்தை கொடுத்து நம்மால் பிரசங்கிக்கவும் முடியும்.